C/2.

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 228

அரசாங்க நிருவாக அமைச்சின் அலுவலகம்,
கொழும்பு. 7
1983 நவம்பர் மாதம்

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனத் தலைவர்கள் யாவருக்கும்.

## மின்சாரத்தைச் சிக்கனப்படுத்தல்

கூறிய பட்டியல் மிக்கையாவு மின் ... மிச்சம் படிப்பு, மின்சார சபையுடன் ஒத்துழைக்குமாறு உங்களை வேண்டுதல் மிகவும் ... விருக்கின்றது.



02. மின்சாரத்தைச் சிக்கனப்படுத்தும் பணிக்குப் பொறுப்பாக இருக்கும் பொருட்டு ஒவ்வோர் அலுவலகத்திலும்/உப அலுவலகத்திலும் குறிப்பிட்டவோர் உத்தியோகத்தரை அல்லது உத்தியோகத்தர்களை தயவு செய்து நியமிக்கவும். குறித்த உத்தியோகத்தரின்/உத்தியோகத்தர்களின் பெயர், பதவி என்பன குறிப்பிடப்பட்டு, ஒவ்வொரு நாளினதும் இறுதியில் மின்விளக்குகள், மின்விசிறிகள், காற்றுச் சீராக்கிகள் முதலிய யாவற்றினதும் ஆளிகள் நிறுத்தப்படுகின்றன என்பதை உறுதிப் படுத்தும் பொறுப்பை மட்டுமன்றி, குறித்த நாள் முழுவதிலும் தொழிற்படும் ஏதும் அநாவசியமான மின்விளக்குகள், மின்விசிறிகள் முதலியவற்றின் ஆளிகள் நிறுத்தி வைக்கப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பையும் ஏற்குமாறு வேண்டப்படுதல் வேண்டும்.

03. தமது அறைகளில் காற்றுச்சீராக்கிகளை வைத்திருக்கும் உத்தியோகத்தர்கள் தற்போதைய மின் பற்றுக்குறைக் காலத்தின் போது இக் காற்றுச்சீராக்கிகளைத் தொழிற்படுத்தாதிருக்குமாறு குறிப்பாக வேண்டப்படுகின்றனர்.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.